# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2231/24 - 2021 ජූනි මස 11 වැනි සිකුරාදා - 2021.06.11

*2231/24 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

பணிப்புரை இல: 80

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

**10(1) (ஆ) (II) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை**

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரவு 10(1)(ஆ)(II)இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது எவரேனும் இறக்குமதியாளர், உற்பத்தியாளர், பண்டகசாலை உரிமையாளர், சேகரிப்பாளர், விநியோகஸ்தர் அல்லது மொத்த வியாபாரி தனது உடைமையில், பாதுகாப்பில், தனது கட்டுப்பாட்டில் காணப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களை பண்டகசாலைகள், சைலோக்கள் (silos), களஞ்சியங்கள், கொள்கலன்கள்(Containers) அல்லது வேறு ஏதாவது இடங்களில் களஞ்சியப்படுத்துவதாயின் அத்தகைய பண்டகசாலை, சைலோ (silo), களஞ்சியம், கொள்கலன் (Container) அல்லது வேறு இடம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என பணிப்புரை விடுக்கின்றது.

1. சீனி (சிவப்பு சீனி (Brown Sugar) மற்றும் வெள்ளை சீனி)
2. பால்மா (முழு ஆடை, கொழுப்பு குறைந்த, கொழுப்பு அற்ற மற்றும் குழந்தை)

மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் பதிவு செய்யாது எந்தவொரு இறக்குமதியாளர், உற்பத்தியாளர், பண்டகசாலை உரிமையாளர், சேகரிப்பாளர், விநியோகஸ்தர் அல்லது மொத்த வியாபாரியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களை தனது உடைமையில் வைத்திருக்க கூடாது எனவும் அத்தகைய பண்டகசாலைகள் சைலோக்கள் (silos), களஞ்சியங்கள், கொள்கலன்கள்

1A – PG 5413 – 225 (2021/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(Containers) மற்றும் வேறு இடங்களில் மொத்தமாக அல்லது வேறு வகையில், காணப்படும் பண்டங்கள் தொடர்பான கையிருப்புக்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கோரப்படும் போது வழங்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது அனைத்து இறக்குமதியாளர், உற்பத்தியாளர், பண்டகசாலை உரிமையாளர், சேரிப்பாளர் , விநியோகஸ்தர் அல்லது மொத்த வியாபாரியும் இந்த பணிப்புரை பிரசுரிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பதிவு செய்வதுடன் தனது உடைமையில் மொத்தமாக அல்லது வேறு வகையில் காணப்படும் பண்டங்களின் கையிருப்புக்கள் தொடர்பான தகவல்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு உடனே சமர்ப்பிக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கின்றது.

இப் பணிப்புரை, 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி

மேஜர் ஜெனரல் **சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
2021, யூன் 11.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.